**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.755/2022**
**C/W**
**O.S.No.754/2022**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : R.பழனிச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ராமசாமிகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : அம்பிளிக்கை | வயது | : சுமார் 57 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 18.06.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

நானும், 1-ம் பிரதிவாதி கிருஷ்ணசாமிகவுண்டரும் பங்காளிகள் என்றால் ? சரிதான். எங்களுக்குள் எப்போது பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் ? கடந்த 1971ம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் E செடியூல் 1 இலக்க சொத்தாக சர்வே எண்.10/2 என்ற புலத்தில் 49 செண்ட்டில் வடபுறம் 37 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல, 32 செண்ட் நிலம் தான் ஒதுக்கப்பட்டது. ஆவணத்தில் 32 செண்ட் என்று குறிப்பிட்டு இருந்தாலும், கிருஷ்ணசாமிகவுண்டரின் அனுபவத்தில் 37 செண்ட் நிலம் பூஸ்துதியில் இருந்தது என்றால் ? இல்லை. கடந்த 10.10.1971ம் நாள் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்ட பிறகு கடந்த 12.09.1997ம் நாள் கிரைய ஆவணம் ஏற்படுத்தும் நாள் வரை 37 செண்ட் நிலத்தினை 1-ம் பிரதிவாதி அனுபவித்து வந்தார் என்றால் ? இல்லை. சர்வே எண்.10/2ல் உள்ள புலத்தில் தென்புறம் குறிப்பிட்ட நான்கு எல்லைகளுக்குள் 12 செண்ட் நிலம் தான் இருந்தது என்றால் ? தவறு, 17 செண்ட் நிலம் உள்ளது. எனது தகப்பனார் ராமசாமிகவுண்டர் பாகப்பிரிவினை ஏற்பட்ட பிறகு சர்வே எண்.10/2 என்ற

புலத்தில் 12 செண்ட் நிலத்தை தான் அனுபவித்து வந்தார் என்றால் ? சரியல்ல. நாளது வரை நாங்கள் 12 செண்ட் நிலத்தை அனுபவித்து வருகிறோம் என்றாலும், 1–ம் பிரதிவாதி கிருஷ்ணசாமிகவுண்டர் அனுபவித்து வந்து சொத்தினை 2–ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதால் நாளது வரை 2–ம் பிரதிவாதி 37 செண்ட் நிலத்தை அனுபவித்து வருகிறார் என்றால் ? சரியல்ல. கிருஷ்ணசாமிகவுண்டர் சர்வே எண்.10/2 என்ற புலத்தில் வடபுறம் குறிப்பிட்ட நான்குமாலுக்குள் 37 செண்ட் நிலத்தை அனுபவித்து வந்ததால், உட்பிரிவு செய்யப்பட்டு புதிய உட்பிரிவு எண்.10/2A என்று உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. வருவாய்துறையினர் தவறாக உட்பிரிவு செய்துள்ளார்கள். அதேபோல் எங்களுக்கும், 12 செண்ட் நிலம் என்று குறிப்பிட்டு உட்பிரிவு எண்.10/2B என்று உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்றால் ? தவறாக உட்பிரிவு ஏற்பட்டுள்ளது. 1–ம் பிரதிவாதி, சர்வே எண்.10/2 என்ற புலத்தில் 37 செண்ட் நிலத்தினை அனுபவித்து வந்து 1–ம் பிரதிவாதியும் அவரது சட்டப்படியான வாரிசுகளும் சேர்ந்து 2–ம் பிரதிவாதிக்கு சொத்தினை கடந்த 12.09.1997ம் தேதி கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் ? கிரையம் செய்தது உண்மை. ஆனால், சொத்தின் விஸ்தீரணம் 32 செண்ட் என்பதற்கு பதிலாக அதிக விஸ்தீரணம் கொண்டு 37 செண்ட் என்று உட்பிரிவு செய்துள்ளார்கள். வருவாய்துறையினர் சர்வே எண்கள் 10/2A, 10/2B என்று உட்பிரிவு செய்துள்ளநிலையில், அந்த உட்பிரிவில் விஸ்தீரணத்தை தவறாக குறிப்பிட்டு உட்பிரிவு மேற்கொண்டுள்ள நிலையில் வட்டாட்சியர் பிறப்பித்த தவறான உட்பிரிவின் பட்டாவின் பேரில் வட்டாட்சியரிடமோ அல்லது வருவாய் கோட்டாட்சியரிடமோ அல்லது மாவட்ட வருவாய் அலுவலரிடமோ அல்லது மாவட்ட ஆட்சி தலைவரிடமோ தவறான உட்பிரிவை சுட்டிகாட்டி மேல்முறையீடு ஏதேனும் நாளது வரை செய்தேனா என்றால் ? இல்லை. கடந்த 10.10.1971ம்ஆண்டு பாகப்பிரிவினை ஏற்பட்ட பிறகு 1–ம் பிரதிவாதி கிருஷ்ணசாமிகவுண்டரும், அவரது குடும்ப உறுப்பினர்களும் சொத்தினை

அனுபவித்து வந்து, பின்னிட்டு கிரைய ஆவணம் ஏற்படுத்தியதன் வழியாக 2-ம் பிரதிவாதியும், அவரது வாரிசுகளும் சொத்தினை கடந்த 50 ஆண்டுகாலத்திற்கு மேலாக தொடர்ந்து அனுபவித்து வரக்கூடிய விபரம் எங்களுக்கு தெரிந்திருந்து உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளாமல் தற்போது நேரடியாக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது காலவரையறையால் பாதிக்கப்படுகிறது என்றால் ? பத்திரம் எங்களிடம் இருப்பதாலும், சொத்தின் அனுபவம் எங்கள் வசம் இருந்ததாலும், அசல் வழக்கு காலவரையறையால் பாதிக்கப்படுவது கிடையாது. சொத்தின் அனுபவம் எங்களது வசம் இருப்பதாக சொல்லியுள்ள நிலையில் 12 செண்ட் நிலம் தான் என்றால் ? இல்லை. 17 செண்ட் நிலம் ஆகும். தாவா சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யக்கூடிய உரிமை எங்களுக்கு இல்லை என்றால் ? சரியல்ல. தாவா சொத்தின் வழியாக தான் 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சர்வே எண்.8/10A என்ற புலத்திற்கு சென்று வருகிறார் என்றால் ? அது தவறு. சர்வே கற்களை அகற்ற வேண்டும் என்று பரிகார் கோரியுள்ள நிலையில் பிரதிவாதிகள் சர்வே கற்களை நடவில்லை என்றாலும், வருவாய்துறையினர் சர்வே கற்களை நட்டுள்ளதால் பிரதிவாதிகள் சர்வே கற்களை அகற்றவேண்டிய அவசியம் இல்லை என்றால் ? சரியல்ல. நாங்கள் இல்லாத போது சர்வே கற்களை பிரதிவாதிகள் நட்டுவிட்டார்கள். சர்வே கற்கள் நடபட்டதை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை நான் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றாலும், வருவாய்துறையினருக்கோ அல்லது நில அளவை பிரிவிற்கோ எவ்வித மனுவும் கொடுக்கவில்லை என்றால்? காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தற்கான ஆதரவினை மற்றும் புகார் மனு ஏற்பு ரசீது காவல்துறையினர் வழங்கியுள்ளார்களா என்றால் ? கொடுக்கவில்லை, உரிமையியல் சம்மந்தப்பட்ட வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ளும்படி காவல்துறையினர் அறிவுறுத்திவிட்டார்கள். நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்லியுள்ளதை போல் புகார் மனு எதுவும் காவல்

நிலையத்தில் கொடுத்திருக்கும் பட்சத்தில் காவல்துறையினர் புகார் மனு ஏற்பு ரசீது வழங்கியிருப்பார்கள் என்றாலும், நான் புகார் மனு கொடுக்காத காரணத்தினால் தான் புகார் மனுவின் கை நகல் மற்றும் மனு ஏற்பு ரசீதை நீதிமன்றத்தில் ஒப்படைக்காமல் வழக்கிற்காக வேண்டி புகார் மனு கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. தாவா சொத்தில் எனது சித்தப்பா அவர்களுக்கு உரிமை உள்ளதா என்றால் ? ஆமாம். உரிமை உள்ளது. அவரது பெயர் என்ன என்றால் ? நாச்சிமுத்துகவுண்டர் மகன் பழனிச்சாமி ஆவார். இவ்வழக்கில் வாதியாக உள்ள 2–ம் வாதி பழனிச்சாமி நான் தான். எனது தகப்பனார் தான் 1–ம் வாதி ஆவார். எனது சித்தப்பா பழனிச்சாமி என்பவருக்கு சொத்தில் பாகம் இருப்பதாக நான் சொல்லியுள்ள நிலையில் அவரை இவ்வழக்கில் அவசியமான தரப்பினராக நான் சேர்த்திருக்க வேண்டும் என்றால் ? எனது சித்தப்பா பழனிச்சாமிக்கு உடல்நிலை சரியில்லாமல் நடக்க முடியாமல் இருப்பதால் அவரை நான் தரப்பினராக இவ்வழக்கில் சேர்க்கவில்லை. எனது சித்தப்பா பழனிச்சாமி அவர்களை இவ்வழக்கில் நான் அவசியமான தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது அவசிய தரப்பினரை சேர்க்கவில்லை என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல. எனது சித்தப்பாவிற்கும் பங்கு உண்டு. சர்வே கற்களை அகற்ற வேண்டும் என்று நான் இவ்வழக்கில் பரிகாரம் கோரியுள்ள நிலையில் அரசு தரப்பினரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறு சேர்க்காத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு ஏற்புடையது அல்ல என்றால் ? சரியல்ல. நில அளவை துறையினரும் இவ்வழக்கில் அவசியமான தரப்பினர் என்பதாலும், அவர்களை இவ்வழக்கில் சேர்க்காத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல. நான் தாவா சொத்து விபரத்தில் சொல்லியுள்ளதை போல் 17 செண்ட் நிலத்தினை சர்வே எண்.10/2B என்ற புலத்தில் அனுபவிக்கவில்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கில்

கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. இவ்வழக்கு பிரதிவாதிகள் என்மீதும் எனது தகப்பனார் மீதும் சர்வே எண்.8/10A, சர்வே எண்.10/2A என்ற இரண்டு நிலங்களுக்கும் பிராதில் மாதிரி வரைபடத்தில் சொல்லியுள்ளவாறு நிலங்களுக்கு பாதை பாத்தியம் உள்ளதாகவும், மேற்படி பாதை பாத்தியத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். ஆனால், பாதைகள் எதுவும் இல்லை. சர்வே எண்.8/10 A என்ற புலத்தில் 52 செண்ட் நிலத்தினை ராமசாமிகவுண்டரிடமிருந்து பழனிச்சாமிகவுண்டர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் ? சரிதான். அதேபோல் சர்வே எண்.10/2A என்ற புலத்தையும் கிருஷ்ணசாமிகவுண்டரிடமிருந்து பழனிச்சாமிகவுண்டர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் ? சரிதான். ஆனால் தடபாத்தியம் எதுவும் இல்லை. மேற்கண்ட இரண்டு நிலங்களுக்கும் வண்டிவாகனங்கள் எடுத்துச் செல்ல உரிமை உள்ளது என்றால் ? சரியல்ல. 5 செண்ட் நிலம் அதிகமாக அனுபவித்து வருவதால் வண்டி பாதை பாத்தியம் இல்லை. நானும், எனது தகப்பனாரும் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.755/2022 என்ற வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும், அ.வ.எண்.754/2022 என்ற வழக்கினை இவ்வழக்கு பிரதிவாதிகள் கோரியுள்ளவாறு தீர்ப்பளிக்க வேண்டும் என்றாலும் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.06.18 16:57:35 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்